மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு. M. ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., LLM.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
2026– ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21–ஆம் நாள் செவ்வாய்கிழமை
இடைக்கால மனுஎண்.18/2026 ல் அசல் வழக்கு எண்.123/2022
**CNR.No. TNTT-08000190-2022**

1.M.மகாராஜன்
2.M.சுந்தர் ... மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்

/எதிர்/

1.பார்வதி அம்மாள்
2.முருகன்
3.சாந்தி
4.தங்கராஜ் ... எதிமனுதாரர்கள்/வாதி
3, 4, 5 பிரதிவாதிகள்

இம்மனுவானது இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ச.ஆறுமுகப்பெருமாள் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.திருமலைக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.துர்கேஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும் 4 எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கணேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாமல் தோன்றாத் தரப்பினராகியுள்ள நிலையிலும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் செய்து கொண்ட வாத உரைகளை கேட்டறிந்தும், மனு சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று (21.04.2026)இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும் ...

**உத்தரவு**

தீர்ப்புக்காக வாய்தா ஏற்படுத்தப்பட்டுள்ள அசல் வழக்கினை ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியரை வல்லநாடு கிராமம், சர்வே எண்.751க்குரிய புலவரைபடம், அடங்கல் பதிவேடு கொண்டு சாட்சியம் அளிக்க மறுதிறவு செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.21
11:49:51 +0530

**2. மனு சுருக்கம்:**

அ) அசல் வழக்கில் வாதவுரை செய்யப்பட்டு 23.02.2026 ம் தேதி தீர்ப்புரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. திருவைகுண்டம் வட்டாட்சியரை சாட்சியாக விசாரணை செய்தால் தான் 14.3.2001 (வா.சா.ஆ.1)ல் 1ம் இலக்க சொத்து (751/3)க்கு வடபக்கம் வழக்குரை தபசில் 751/35 2ம் இலக்க சொத்து கிடையாது என்பதை நிரூபிக்க வட்டாட்சியர் 'அ பதிவேடு, புலவரைபடத்துடன் விசாரிக்க வேண்டியுள்ளது. தாவா சொத்தை காண்பிக்கக்கூடிய ச.எண்.751க்குரிய புலவரைப்படம் பி.சா.ஆ.7 கணிணி நகல் தெளிவு இல்லாமல் உள்ளது. தாவா சொத்து சர்வே எண்.75/31, 35, 37, 36, 39 ஆகிய எண்களின் தெளிவான புலவரைப்படம் வட்டாட்சியர் அலுவலகத்தில்தான் உள்ளது.

ஆ)தாவா சொத்தின் சர்வே எண்.751/31, 32க்கு வடக்கு பக்கமுள்ள முற்றம் தாவா சொத்து சர்வே எண்.751/37 உள்ளது என்பதை நிரூபிக்க வட்டாட்சியரின் ஆவணங்களுடன் கூடிய சாட்சியம் அவசியம் என்பதால் மனுதாரர்கள் கிரையம் பெற்றுள்ள ச.எண்.751/35, 36, 39 சொத்தையும், வாதி அவரது மகன் கிரையம் பெற்ற வீடுகளையும் சர்வே எண் குறித்தும் எல்கைமால் பற்றியும் வருவாய்துறை ஆவணங்களான புலவரைப்படம், நத்தம் நிலவரித்திட்ட 'அ' பதிவேடு ஆகிய ஆவணங்களை கொண்டு ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியரை சாட்சியாக விசாரணை செய்ய வேண்டியது தாவா வழக்கின் உண்மையை நிரூபிப்பதற்கு அவசியமாக உள்ளது. எனவே ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியரை வல்லநாடு கிராமம், சர்வே எண்.751க்குரிய புலவரைபடம், அடங்கல் பதிவேடு கொண்டு சாட்சியம் அளிக்க விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் வழக்கினை மறுதிறவு செய்ய வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சுருக்கம்:**

மனு சங்கதிகள் மறுக்கப்பட்டு அவற்றை நிரூபிக்கும் பொறுப்பு மனுதாரரை சாரும் என்று சொல்லப்பட்டுள்ளது. வழக்கின் கட்சியாக இல்லாத வாதியின் மகனின் கிரையம் தொடர்பாக ஆவணங்கள் தாக்கல் செய்யக் கோருவது மனுதாருக்கு எந்த சட்ட உரிமையும் கிடையாது. எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும்.



HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.21 11:49:55 +0530

**4.தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை**

தீர்ப்புக்காக வாய்தா ஏற்படுத்தப்பட்டுள்ள அசல் வழக்கினை ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியரை வல்லநாடு கிராமம், சர்வே எண்.751க்குரிய புலவரைபடம், அடங்கல் பதிவேடு கொண்டு சாட்சியம் அளிக்க மறுதிறவு செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது அனுமதிக்கப்பட வேண்டுமா? அல்லது இல்லையா? என்பது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

**தீர்வு**

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் 1, 2 பிரதிவாதிகள். 1ம் எதிர்மனுதாரர் வாதி. 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் 3 முதல் 5 பிரதிவாதிகள் ஆவர். இம்மனுவில் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாமல் தோன்றாத் தரப்பினர் ஆகியுள்ளனர். அசல் வழக்கானது 1ம் எதிர்மனுதாரரால் மனுதாரர்கள் மற்றும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வல்லநாடு கஸ்பா கிராமம், கற்பக விநாயகர் கோவில் தெருவில் நத்தம் சர்வே எண்.329/1, 334 ஆகியவற்றின் தற்போதைய நத்தம் சர்வே எண்.751/31 மற்றும் 751/35ல் கிழமேல் 28 அடி தென்வடல் 13 அடி ஆக 364 ச.அடியில் பிரிவின்றி 182 ச.அ விஸ்தீரணம் கொண்ட தபசில் சொத்து 1ம் எதிர்மனுதாரருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்வதன் தொடர்ச்சியாக அதில் 1ம் எதிர்மனுதாரரின் அனுபவத்தினை மனுதாரர்கள் /1, 2 பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என்று விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் மற்றும் தபசில் சொத்தினைப் பொறுத்து 5ம் பிரதிவாதி/4ம் எதிர்மனுதாரர் 2, 3 எதிர்மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகளுடன் ஏற்படுத்திய கிரைய ஆவண எண்.265/2009 மற்றும் 3, 4 பிரதிவாதிகள் மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளின் தந்தையுடன் ஏற்படுத்திய கிரைய ஆவண எண்.4842/2012 ஆகியவைகள் இல்லாநிலையது என்று விளம்புகை பரிகாரம் ஆகியவை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.21 11:50:00 +0530

6. அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் வா.சா.1 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1 முதல் 4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் 11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இருதரப்பு சாட்சியங்கள் முடிவுற்று வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் தரப்பு வாத உரை கேட்கப்பட்டு 3 முதல் 5 பிரதிவாதிகள் போதிய கால அவகாசம் அளித்தும் வாத உரை நிகழ்த்த முன்வராத நிலையில் 20.02.2026ம் தேதிக்கு முன்பு வாத உரை நிகழ்த்த உரிமையளித்து 23.02.2026ம் தேதி தீர்ப்புக்காக வாய்தா ஏற்படுத்தப்பட்டிருந்த நிலையில் இம்மனுவானது ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியரை வல்லநாடு கிராமம் சர்வே எண்.751க்குரிய புல வரைபடம் மற்றும் அடங்கல் பதிவேடு ஆகியவற்றினை கொண்டு வந்து சாட்சியம் அளிக்க மறுதிறவு செய்ய வேண்டும் என்று உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. எதிருரையில் மனு சங்கதிகள் மறுக்கப்பட்டுள்ளது. மற்றபடி இம்மனுவினை கடுமையாக ஆட்சேபிக்கவில்லை என்பதையே எதிருரை காண்பிக்கிறது. மனுவில் சொல்லியுள்ளது போல் புல எண்.751க்கான இணையவழி கூட்டு வரைபடம் புரிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ளது. புல எண்.751க்கான புல வரைபடம் மற்றும் அடங்கல் பதிவேட்டினை மனுதாரர்கள் சான்று பெற்று சமர்ப்பிக்க இயலும். வழக்கானது தீர்ப்புரை கட்டத்தில் உள்ள நிலையில் மேற்படி ஆவணங்களின் நகல் பெற்று தாக்கல் செய்தால் மேலும் கால தாமதம் ஆகும். தபசில் சொத்தில் இருதரப்பினரும் உரிமை கோரியுள்ளனர்.

8. இம்மனுவினை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு பாதகமும் ஏற்படப்போவதில்லை. மேலும், புல எண்.751க்கான வரைபடம் மற்றும் அடங்கல் ஆவணம் சமர்ப்பிக்கப்படுவதுடன் வட்டாட்சியரின் சாட்சியம் பெறப்பட்டால் இவ்வழக்கில் எழுந்துள்ள பிரச்சனைகளை அறுதியாகவும் இறுதியாகவும் தீர்மானிக்க இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலே விவாதித்துள்ள காரணங்களின் அடிப்படையில் இம்மனுவினை 1ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையின் பேரில் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.21 11:50:03 +0530

9.முடிவாக,

**இம்மனு 1ம் எதிர்மனுதாரருக்கு ரூ.500 செலவுத் தொகை அளித்து அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப்பார்த்து பிழைத்திருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 21.04.2026 உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.21 11:50:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் – இல்லை

மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் –இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் –இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் -இல்லை

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.21 11:50:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.